# பாறைகள் வெளியே தெரியும் பரிதாபம்



▶ காவிரி ஒப்பந்தப்படி தமிழகத்துக்கு தேவையான தண்ணீரை கர்நாடக அரசு தருவதில்லை. பருவ மழையும் முழுமையாக பெய்யவில்லை. இதனால், மேட்டூர் நீர்மட்டம் 22 அடியாக சரிந்து, ஆங்காங்கே பாறைகளாக காட்சி அளிக்கிறது.

# துறைமுக பணி ஒதுக்கீட்டில் முறைகேடு சிபிஐ விசாரணை கோரி வழக்கு

## மத்திய அரசுக்கு நோட்டீஸ்

**மதுரை, ஜூன் 24:** நெல்லை, கிருஷ்ணபுரத்தை சேர்ந்த ராமசுப்பு, ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு:

தூத்துக்குடி துறைமுகத்தில் அதிகளவு கண்டெய்னர்களை கையாளும் வகையில் தனி முனையம் அமைக்க முடிவானது. இதற்காக ரூ.312 கோடியில் பணிகள் ஒதுக்கப்பட்டது. இந்த பணிகள் கடந்த 3.6.2014க்கு முன் முடிந்திருக்க வேண்டும். ஆனால், 15 சதவீத பணிகள் மட்டுமே முடிந்துள்ளது. பணிகளுக்கான காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் பெற்றவர்கள் பணியை மேற்கொள்ளாமல் வேறொரு நிறுவனத்தின் மூலம் பணியை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர். பணிகள் ஒதுக்கியதில் பெருமளவு முறைகேடு நடந்துள்ளது. இதுகுறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை நேற்று விசாரித்த நீதிபதிகள் ஏ.செல்வம், என்.ஆதிநாதன் ஆகியோர், மத்திய கப்பல்துறை அமைச்சகம், சிபிஐ இணை இயக்குநர், துறைமுக தலைவர் உள்ளிட்டோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர். விசாரணையை ஜூலை 6க்கு தள்ளி வைத்தனர்.

### ₹1 லட்சத்துக்கு விலை பேசி

# பள்ளி மாணவியை மணந்த ஓட்டல் உரிமையாளர் கைது

**நாகர்கோவில், ஜூன் 24 :** நாகர்கோவிலில் 10ம் வகுப்பு மாணவியை திருமணம் செய்த வழக்கில் தேடப்பட்டு வந்த ஓட்டல் உரிமையாளரை போலீசார் கைது செய்துள்ளனர்.



▶ ராபர்ட்

நாகர்கோவில் அடுத்த பள்ளம் துறையை சேர்ந்தவர் ராபர்ட் பெல்லார்மின் (41). இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் 2 குழந்தைகள் உள்ளனர். குடும்ப தகராறு காரணமாக குழந்தைகளுடன் மனைவி பிரிந்து சென்றுவிட்டதால், வெளிநாட்டிலிருந்து வந்த ராபர்ட் பெல்லார்மின், முட்டத்தில் ஹோட்டல் நடத்தி வந்தார். 2 வதாக திருமணம் செய்ய நண்பர் ஒருவரின் உதவியுடன் தஞ்சையை சேர்ந்த 10ம் வகுப்பு மாணவியின் தாயாரிடம் குடும்ப கடனை அடைத்து விடுவதாக கூறி, முன் பணமாக ரூ. 1 லட்சம் கொடுத்து மாணவியை ராபர்ட் பெல்லார்மின் மணமுடித்து, நாகர்கோவில் குருசடி பகுதியில் வாடகை வீட்டில் குடும்பம் நடத்தியுள்ளார்.

பார்வதிபுரம் பகுதியில் ஓட்டல் நடத்தி வந்த ராபர்ட் பெல்லார்மின், மாணவியை வீட்டுக்குள் பூட்டி வைத்து சென்றது குறித்து அக்கம்பக்கத்தினர் அளித்த தகவலின் பேரில் கடந்த இரு தினங்களுக்கு முன் மாணவியை போலீசார் மீட்டனர். அவரிடம் நடத்திய விசாரணையில், மாணவியை ராபர்ட் பெல்லார்மின், பலமுறை பலாத்காரம் செய்தது தெரிய வந்தது. இதையடுத்து மாணவி புகாரின் பேரில் ராபர்ட் பெல்லார்மின் மீது நாகர்கோவில் அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

மாணவியின் தாயார் நேற்று நாகர்கோவில் வந்து போலீசார் முன் ஆஜரானார்.

அவரிடம் நடத்திய விசாரணையில், ராபர்ட் பெல்லார்மின், குடும்ப கடனை அடைத்து விடுவதாக கூறியதால் அவருக்கு திருமணம் செய்து கொடுக்க சம்மதித்தேன். ஆனால் பணம் எதுவும் தரவில்லை. அவருக்கு, எனது மகளை நான் திருமணம் செய்து வைக்கவில்லை. எனது மகளுக்கு செல்போன் வாங்கி கொடுத்து பேசிக் கொண்டு இருந்தவர், திடீரென எனது மகளை அழைத்து சென்றுவிட்டார் என்றார். மாணவி ஆசாரிபள்ளம் மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனிடையே தேடப்பட்டு வந்த ராபர்ட் பெல்லார்மின், நேற்று மதியம் கைது செய்யப்பட்டார்.

### ஆசிரியர் பணி வழங்கக்கோரி

# ‘டெட்’ சான்றிதழ் ஒப்படைப்பு போராட்டம்

**மதுரை, ஜூன் 24:** தமிழகம் முழுவதும் கடந்த 2013ம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் தகுதித்தேர்வு (டெட்) நடத்தியது. இதில் ஏராளமானோர் தேர்ச்சி பெற்றனர். ஆனால் இவர்களுக்கு இதுவரை பணி வழங்கப்படவில்லை. பணி நியமனம் செய்யுமாறு பலமுறை கோரிக்கை விடுத்தும் அரசு கண்டுகொள்ளவில்லை. எனவே, ஆசிரியர் பணி வழங்கக்கோரி, ‘டெட்’ சான்றிதழை, மதுரை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைக்கும் போராட்டம் நேற்று நடந்தது.

ஒருங்கிணைப்பாளர் வடிவேல் தலைமையில், 100க்கும் மேற்பட்டோர் மதுரை தல்லாகுளத்தில் உள்ள மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம் முன் திரண்டனர். பின்னர் சான்றிதழ்களை ஒப்படைக்க அலுவலகத்திற்குள் செல்ல முயன்றனர். அப்போது, போலீசார் தடுத்து நிறுத்தி 5 பேரை மட்டும் உள்ளே அனுமதித்தனர்.

இவர்கள் கல்வித்துறை அதிகாரிகளிடம் தங்களது ‘டெட்’ தேர்ச்சி சான்றிதழ்களை ஒப்படைத்தனர். ஆனால் அதிகாரிகள் ஒரிஜினல் சான்றிதழை வாங்க மறுத்தனர். இதனால் ஜெராக்ஸ் நகலை வழங்கிவிட்டு சென்றனர். சான்றிதழ் ஒப்படைக்கும் போராட்டத்தால் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# தமிழகத்துக்கு முழுநேர ஆளுநர்

## அன்புமணி வலியுறுத்தல்

**திருவிடைமருதூர், ஜூன் 24:** தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூரில், அன்புமணி நிருபர்களுக்கு அளித்த பேட்டி:



தமிழகத்தை ஆளும் அரசுக்கு எந்த தகுதியும், திறமையும் கிடையாது. ஊழலை தவிர வேறு எதுவும் தெரியாது. மணல் கொள்ளை, மாணவர் பிரச்னையான நீட்தேர்வு, விவசாயிகள் பிரச்னை என பல்வேறு பிரச்னைகள் உள்ளது. இதை தீர்ப்பதற்கு எந்த ஒருநடவடிக்கையும் எடுக்காமல் மத்திய அரசின் அடிமையாக செயல்பட்டு வருகிறது.

எவ்வளவு காலம் ஆட்சியில் இருப்போம் என அவர்களுக்கே தெரியாது. தமிழகத்தில் முழுநேர ஆளுநரை நியமிக்க வேண்டும். அதிமுக அனைத்து அணிகளும் பாஜக அடிமைகளாக உள்ளது. இதன்காரணமாக தமிழகத்தில் எந்த ஒரு நல்லதும் நடக்காது.

இவ்வாறு அன்புமணி கூறினார்.


1 NATION TAX MARKET GST

> சரக்கு மற்றும் சேவைவரிக்கு தயாராகுங்கள் >>

சரக்கு மற்றும் சேவைவரி 1 ஜூலை, 2017 முதல் நடைமுறைக்கு வருகிறது

புதிய வரிசெலுத்துவோர்கள் மற்றும் நடப்பு வரிசெலுத்துவோர்கள் மாறுவதற்கான பதிவு செயல்பாடு 25 ஜூன், 2017 முதல் தொடங்குதல்




**சரக்கு மற்றும் சேவைவரி கீழ் புதிய வரிசெலுத்துவோர் பதிவு பெறுதல்:**

- சரக்கு மற்றும் சேவைவரி கீழ் புதிய பதிவுக்கான விண்ணப்பம் ஜூன் 25, 2017 முதல் தாக்கல் செய்யப்படலாம்.
- பதிவுக்கான விண்ணப்பம் பதிவு பெறுவதற்குரிய பொறுப்பு தேதியின் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படலாம்.
- ஜூலை 1, 2017 நாளில் பதிவுக்கான பொறுப்புள்ள வரிசெலுத்துவோர் சரக்கு மற்றும் சேவைவரி இணையதளத்தில் ஜூலை 31, 2017 வரை பதிவு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.
- புதிய பதிவுக்கு விண்ணப்பிப்பதற்கான காலம் தாராளமாக உள்ளது.

**நடப்பு மதிப்புகூட்டு வரி, சேவை வரி மற்றும் மத்திய கலால் வரிசெலுத்துவோர் மாறுதல்:**

- ‘RC ரத்தானது’ என்பதாக காட்டும் மாறுவதற்கு பயன்படுத்த முடியாத தற்காலிக ID மறுசெயல்படுத்தப்படுகின்றன. இதை ஜூன் 25, 2017 முதல் சரக்கு மற்றும் சேவைவரி தளத்தில் பதிவு பெறுவதற்கு பயன்படுத்தவும். ஒருமுறை சேர்க்கைப்பதிவு பெற்றதும், உங்கள் பதிவு படிவத்தை சமர்ப்பிக்க உங்களுக்கு மூன்று மாதங்கள் கிடைக்கும்.
- மாறும் வரிசெலுத்துவோர்கள் பதிவு சான்றிதழ் (GSTIN) வழங்கப்படுவதற்காக காத்திருக்காமல் மூன்று மாதங்களுக்கு ஜூலை 1, 2017 முதல் தங்கள் வர்த்தகத்தை நடத்துவதற்கான தங்கள் GSTIN ஆக சேர்க்கைப்பதிவு தற்காலிக ID ஐ பயன்படுத்தலாம்.
- ஜூன் 2017 மாதத்தில் மத்திய கலால் மற்றும் சேவை வரி பதிவு பெற்றிருக்கும் வரிசெலுத்துவோர்களுக்கு ஜூலை, 2017 முதல் வாரத்தில் தற்காலிக ID வழங்கப்படும்.

davp 15502/13/0053/1718

ஜிஎஸ்டி விசாரணைக்கு @askGST_GoI டுவிட் செய்யவும்

மத்திய கலால் மற்றும் சுங்கம் வாரியம் & மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் வணிகவரித் துறை
www.cbec.gov.in